
# மன்னா

**CSI தமிழ் திருச்சபை**
**அலைன்**





பொழிவு 13 செப்டம்பர் 2020 ஆகாரம் 09

# From the Pastors Desk

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே...!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்...! ஸ்தோத்திரம்...!!

பிள்ளைகளே...! வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப்பயப்படுதலை உங்களுக்கு போதிப்பேன். சங்கீதம்: 34:11

**COME, MY CHILDREN, LISTEN" TO ME; I WILL TEACH YOU THE FEAR OF THE LORD. PSALM:** 34:11

**கடவுள் நமக்கு ஒரு நல்ல ஆசிரியராக இருந்து ஞானத்தை புகட்டுகிறார்.**

**கடவுள் தம்முடைய பிள்ளைகளை அழைத்து, அரவணைத்து அறிவு புகட்டுகிறார்.**

எனவே கடவுளின் அடிச்சுவடுகளை ஏற்று கற்றுக் கொள்ளவும், கற்றுக் கொடுக்கவும் கடவுள் நம்மை அழைக்கிறார்.

அன்பானவர்களே...! இந்த புதிய மாதத்தைக்காண செய்த ஆண்டவருக்கு உங்களோடு இணைந்து துதிக்கிறேன்...! இந்த மாதத்தில் நமக்கு சிறப்பு தினமாக ஆசிரியர் தினம் (**TEACHER'S DAY**) தென்னிந்தியத் திருச்சபை நிறுவன நாள் (**CSI. FORMATION DAY**) முதியோர் தினம் (**SENIOR CITIZENS DAY**) ஆகிய சிறப்பான தினமாக அனுசரிக்க இருக்கின்றோம், அனைவரையும் வாழ்த்தவும் ஜெபிக்கவும் அழைக்கப்படுகின்றோம்.

தொடர்ந்து இந்த **COVID**-19. காலக்கட்டத்தில் நமது ஆவிக்குரிய விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல், பிறருக்காகவும், நமக்காகவும், திருச்சபைக் 'காகவும் ஜெபிக்குமாறு ஆண்டவருக்காக எழும்பி பிரகாசிக்கவும் அழைக்கப்படுகின்றோம், திருச்சபையின் வழியாக **ONLINE ZOOM** மூலமாக நடைபெறும் அனைத்து குழுக்களின் நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து நாம் எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியுடன் ஆராதிக்கின்ற காலத்திற்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக...!

ஆண்டவரின் திருப்பணியில் உங்கள் ஆயர்...!

REV. S. P. BASKAR | +971 52 803 3843
EMAIL: BASKARNANCY40@GMAIL.COM | CSITCALAIN@GMAIL.CO

# "இரு வழிகள்"



## கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார், துன்மார்க்கரின் வழியோ அழியும்.
## சங்கீதம்:1:6

## FOR THE LORD WATCHES OVER THE WAY OF THE RIGHTEOUS, BUT THE WAY OF THE WICKED WILL PERISH.
## PSALMS: 1:6

முன்னுரை:

சங்கீதம் 1. இது இரு வழிகள் குறித்து சொல்லப்படுகிறது. நல்வழியைப் பின்பற்றுவோர் நல்லோர், தீய வழியைப் பின்பற்றுவோர். தீயோர் அல்லது பொல்லார் எனவும். இருவருக்கும் கடவுள் அளிக்கும் தீர்ப்பைக்குறித்து சொல்லப்படுகிறது.

சங்கீதங்களில் நற்பேறு பெற்றவர் அல்லது பாக்கியவான் (சங்கீதம்:1:1) என்று மனிதரை வாழ்த்தித்தொடங்கி ஆண்டவரைப் புகழ்ந்திடுக (சங்கீதம்:150:6) என்று இறுதி வாழ்த்துடன் முடிவுறுகிறது. சங்கீதம் ஒன்றில் நல்லோரையும், தீயோரையும் நெறிப்படுத்துகிறது சங்கீதம் ஆகும்.

நல்லது செய்யின் நல்லது விழையும், தினை விதைத்தவர் தினை அறுப்பார்; வினை விதைத்தவர் வினையையே அறுப்பார்" என்ற மரபுகளை காண்பிக்கின்றது.

Author and date unknown. Godly wisdom here declares the final outcome of the two "ways" "the way of sinners" (v.1) and "the way of the righteous" (v.6) As an introduction to the book, this Psalm reminds the reader that those of whom the Psalms speak as the people of God, those whom he receives in his presence and favors with his salvation and blessings, must be characterized by righteousness..... sinners have no place among them v.5 that the godly piety that speaks in the Psalms is a faithful response to God's revealed directives for life which is the path that leads to blessedness.

## நல்வழியைப் பின்பற்றுவோர் நல்லோர்.

சங்கீதம்1:1 நற்பேறு பெற்றவர் அல்லது பாக்கியவான். சங்கீதங்களில் பாக்கியவான் அல்லது நற்பேறு பெற்றவர் என்ற வார்த்தை 26 முறை வருகின்றது. இதற்கு "அசெரே" என்று எபிரேய வார்த்தை குறிக்கப்படுகிறது. இதற்கு பொருள் வாழ்வின் அனைத்து நலன்களைக் குறிப்பதாகும். கடவுளுக்கும் மனிதருக்கும் ஏற்புடைய ஒரு வாழ்வே நற்பேறு பெற்ற வாழ்வு ஆகும். அவர்களே பாக்கியவான்கள். துன்மார்க்கரின் ஆலோசனையில் நடவாமல், பாவிகளின் வழியில் நில்லாமல், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமல் இருப்பவர், பாக்கியவான்கள் அவர்கள் தீயவர்கள் அல்லாதவர்கள் நேர்மையானவர்கள், நல்லவர்கள், பாக்கியவான்கள், என அழைக்கப்படுவார்கள்.

சங்கீதம்:1:2- கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து... இது ஆண்டவரின் திருச்சட்டம். இன்று ஆண்டவரின் திருச்சட்டத்தின் மூலம் மகிழ்ச்சி அடைவார்கள் இதற்கு "தோரா" என்ற எபிரேய சொல் சட்டம் என்பதாகும். இந்த சொல் கடவுளின் வெளிப்பாடு ஆகும். அவர் தந்துள்ள வாழ்க்கை நெறி, மற்றும் வழிமுறைகள் அனைத்தையும் சுட்டிக்காட்டும் கர்த்தருடைய வேதத்தின் வழியாக நடப்பவர்கள் நல்வழியைப் பின்பற்றுகிறவர்கள் அவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள்.

சங்கீதம்:1:3- நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரம். கடவுளின் ஆசீர்வாதம் என்பது இயற்கை சூழலின் வழியே வெளிப்படுவதை திருமுறை பல இடங்களில் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. எனவே மனிதரும் நீர்க் கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரமாக இருந்து கனி கொடுக்கிறவர்கலாய் இருக்க அழைக்கப்படுகிறோம் அப்படிப்பட்டவர் செய்வதெல்லாம் வாய்க்கும் அவர்கள் நல்வழியைப் பின்பற்றுகிறவர்கலாய் இருப்பார்கள்.

## தீய வழியைப் பின்பற்றுவோர் தீயோர்.

சங்கீதம்:1:4 பதரைப் போலாவார். துன்மார்க்கர்கள் அல்லது பொல்லார் என்பவர் பயனற்றவர் ஆவார். முறத்தால் புடைத்துப்பதரைப்போல் ஆவார்கள் ஆண்டவரின் தீர்ப்புக்கு தள்ளப் படுபவர்கள் ஆவார்கள்.

சங்கீதம் :1:5 நீதித் தீர்ப்பு (அ ) நியாயத்தீர்ப்பு. இது இறுதிப்பொதுத் தீர்ப்பு அல்லது அன்றாடும் நம் செயல்களுக்கு கடவுள் கொடுக்கும் தீர்ப்பு ஆகும், இந்தத் தீர்ப்பு தீயோர் அல்லது பொல்லாதவர் மேல்வரும் அவர்கள் நிலைத்து நிற்க மாட்டார்கள், பதர் போல் காற்றோடு காற்றாய்ப் பறந்து மறைந்து ஒழிவர் என்று சொல்லப்படுகிறது.

## இருவருக்கும் கடவுள் அளிக்கும் தீர்ப்பு

சங்கீதம்:1:6 கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார். நீதிமான்களை கடவுள் பாதுகாப்பார், வழிநடத்துவார், துணை நிற்பார், அன்பு செய்வார் என புரிந்துகொள்ள அழைக்கப்படுகின்றோம்.


## நிறைவாக...

நம் ஒவ்வொருவர் முன்னும் இரண்டு வழிகள் உள்ளன, ஒன்று நன்மைக்கும் வாழ்வுக்கும் வழிகாட்டுவது, இன்னொன்று தீமைக்கும் இழுத்துச் செல்வது, ஒன்று வளரும் ஒளியானது, மற்றது அழிக்கும் இருள் போன்றது, நாம் எந்த வழியை பின்பற்றுகிறோம் என்பதை புரிந்து கடவுள் விரும்பும் வழியில் நடக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் உங்கள் ஆயர்

**Rev. S. P. Baskar.**



# ரெபெக்காள்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

முன்மாதிரியான பெண்.

கிறிஸ்துவத்திருமணம் நிச்சயதார்த்த நிகழ்ச்சிகளில் ரெபெக்காள் பற்றி பகுதி வாசிப்பது என்பது ஒரு கட்டாயமாகிவிட்டது. காரணம் ரெபேக்கா ஒரு முன்மாதிரியான பெண் என்பதை காணுகிறோம். ஆதி :24'ம் அதிகாரத்தில் திருமணத்திற்கு பெண் பார்ப்பதையும் அங்கு நடைபெற்ற உரையாடல் ரெபேக்காலின் நற்பண்பிற்கான அடையாளமாகும். ஆபிரகாம் தம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான எலியேசரை தம் மகன் ஈசாக்குக்கு பெண் பார்க்க அனுப்பினார் (ஆதி:24:1–4) இது ஆண்டவரின் செயல் ஆகும். எலியேசரும், ரெபேக்காலும் சந்தித்துக் கொண்டபோது நடந்த நிகழ்வு இந்த காரியம் ஆண்டவரால் நிகழ்ந்துள்ளது என நம்புகின்றனர். (ஆதி :24:50)

**அழகும் பண்பும் கொண்டவர்.**

இவர் பெத்துவேலின் மகள், ரெபெக்காள் மிகவும் அழகானவர் (ஆதி :24:16) அத்துடன் எலியேசர் யார் என்று தெரியாத போதிலும் தண்ணீர் தாகத்திற்கு நிற்கும் அறிமுகம் இல்லாதவரை வரவேற்கின்றார். அவர்களுக்கு உதவி செய்கிறார் இது அவருடைய நற்பண்பை காட்டுகிறது.

**சவால்களை மேற்கொண்டவர்.**

நாட்டில் கொடிய பஞ்சம் வந்தபோது (ஆதி :26:1) இவர்கள் இடம்பெயர வேண்டி இருந்தது; வேறொரு மண்ணிலே அவர்கள் தஞ்சம் புகுந்தனர். ஈசாக்கு தன் மனைவி அழகாய் இருந்ததினால் அவர் நிமித்தம் தான் கொல்லப்பட்டு விடுவோமோ என்று அவரைச்சகோதரி என்று சொன்னார். (ஆதி;26:7) அன்று அரசனாக இருந்த அபிமெலக்கு அதைக் கண்டுபிடித்து அவர்களை கண்டித்து பாதுகாப்பும் வழங்குகிறார். இது அரசனின்

பெருந்தன்மையை காட்டுகிறது. ஆனால் மனைவி என்ற நிலையில் மிகவும் மன உலச்சலுக்கு தள்ளப்பட்டார். அத்துடன் குழந்தைப்பேறு ஈசாக்கைத் திருமணம் முடித்து 20 ஆண்டுகளுக்குப் பிறகு இரட்டை குழந்தை பிறந்தது 20 ஆண்டுகள் எவ்வளவு போராட்டங்கள் சந்தித்தால் இப்படி சவால்களை மேற்கொண்டார்.

**தடுமாற்றங்களைக் கையாளத் தெரிந்தவர்.**

ஈசாக்கின் கடைசி காலத்தில் ஒரு மகனுக்கு மட்டும் (ஏசா) தந்தையின் ஆசீர்வாதம் கிடைக்கப்போகிறது என்று அறிந்து இளைய மகனாகிய யாக்கோபுக்கு இந்த ஆசீர்வாதம் கிடைக்க வேண்டும் என்று திட்டம் போட்டார். இங்கு ஒரு தாய்க்கு ஏற்படும் தடுமாற்றத்தைக் காணமுடிகிறது. ஏசா, யாக்கோபை கொல்ல முயல்வதை அறிந்து யாக்கோபு பிழைத்து வாழ அறிவுரை சொல்லி தன் சகோதரன் லாபான் வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார், இல்லையென்றால் இது இன்னொரு காயின் ஆபேல் கதை போற்று நடந்திருக்கும் எனவே குடும்பத்தில் இருந்த தடுமாற்றங்களை மிகவும் சிறப்பான முறையில் கையால தெரிந்தவ ராய் இருந்தார்.

**வாழ்க்கை பயணத்தை சீராக முடித்தவர்.**

பாலஸ்தீன நாட்டுக்கு சென்றுவரும் மக்கள் தவறாமல் பார்க்க விரும்பும் ஒரு கல்லறை ஆபிரகாமின் கல்லறை "ஏப்ரோன்" என அழைக்கப்படும் இடத்தில் இது அமைந்துள்ளது. இங்கேதான் ஆபிரகாம் நிலம் ஒன்றை வாங்கினார் ஆதி(49:29–32) என குறிக்கப்பட்டுள்ளது. இங்குதான் ஆபிரகாம், சாராள் அடக்கம் பண்ணினார்கள். அதே இடத்தில் தான் ஈசாக்கும், ரெபேக்காளும் அடக்கம் பண்ணப்பட்டார்கள் என அறிகிறோம். ரெபெக்காள் தம்முடைய வாழ்க்கையின் கடைசி காலம் மட்டும் ஈசாக்கு உடன் வாழ்ந்து மரித்தார்.

இன்றைக்கும் ரெபெக்காள் போல் நாமும் நல்ல பண்புகள் பெற்று வாழ ஆண்டவருக்குள் அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் திருப்பணியில் உங்கள் ஆயிரம்மா.
Mrs. Nancy Baskar





# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே..

சர்வ வல்லவரின் நிழலில் மறைத்து காக்கும் உன்னதமானவருடைய நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்... மீண்டும் ஒரு புதிய மாதத்தின் மகிழ்ச்சியான எதிர்பார்ப்புடன் உங்களை சந்திக்கும் தருணத்தை தந்த ஆண்டவருக்கு என் நன்றிகள் பல...

தேவன் இஸ்ரவேலை பறந்து காக்கும் பட்சியை போல் காக்கிறார்; தேவனுடைய பலத்த கரத்தை அடைக்கலமாக நம்பியிருக்கும் நமக்கு அவர் இம்மாதத்தில் அருளும் வாக்குத்தத்தம் **“விக்கினங்கள் கடந்துபோகும் மட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்”** சங்கீதம் 57:1.

செப்டம்பர் மாதம் தென்னிந்திய திருச்சபையின் இறைமக்களாகிய நமக்கு மிகவும் முக்கியமான மகிழ்ச்சியான மாதம். ஏனென்றால் கிறிஸ்தவத்தின் பல பிரிவுகளாய் சிதறிக்கிடந்த நம்மை ஆண்டவரின் பேரருளும் நம் திருச்சபை தலைவர்களின் தொலைநோக்கும் ஒரே ஐக்கிய திருச்சபையாய் 27/09/1947 அன்று உருவாக்கப்பட்ட நன்னாளை நினைவுகூறும் மாதமிது.

கர்த்தர் நம் ஜெபத்தை கேட்டார்... கடந்த ஆகஸ்ட் மாதம் 25’ம் தேதி நமது சபையின் புதிய ஆயர் அருள்திரு எஸ்.பி.பாஸ்கர் அவர்கள் ஐக்கிய அரபு அமீரகம் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு பிரயான அனுகூலங்களை வாய்க்கச்செய்து அழைத்து வந்த நம்முடைய தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்கள் இறைப்பணி நமது சபையில் சிறக்க நாம் யாவரும் கருத்தாய் ஜெபிப்போம். ஆயருடைய பிரயான காரியங்களில் பல உதவிகள் செய்த திரு. டேவிட் லிவிங்ஸ்டன், திரு. ஜேனர்ஸ் பிரிட்டோ, மற்றும் ஜெபித்த யாவருக்கும் நன்றியையும், வாழ்த்துகளையும் கூறிக்கொள்ளுகிறேன்.

நமது திருச்சபையின் முலமாக அனுப்பப்பட்ட மிஷனரிகளுக்காக அனுதினமும் ஜெபியுங்கள். நாம் இணைந்து செய்யும் இப்பணி மூலம் நல்ல அறுவடை கிடைக்க அனுதினமும் மன்றாடுவோம். ஜெபத்தினாலும் தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வூழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு, கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவார். அனைவரோடும் கர்த்தருடைய பாதுகாப்பும் அரவணைப்பும் இருக்கவேண்டும் என்று சொல்லி ஜெபிப்போம், ஜெபிக்கிறோம்...

இப்படிக்கு ...கிறிஸ்துவின் பணியில்
எஸ். சுரேஷ் ராஜன்

**“முதல் முயற்சியில் வெற்றி இல்லையே” என்று கேள்வி எழுப்புவதை விட....**
**“வெற்றி பெறும்வரை ஏன் முயற்சி செய்யவில்லை” என்ற கேள்விக்கு பதில் தேடுவோம்..**

# கொஞ்சத்தில் உண்மை

## தாலந்துகளின் உவமை

மத்தேயு 25:14-30 & லூக்கா 19:12-27

இந்த உவமையிலிருந்து பின்வரும் காரியங்களை நாம் கற்றுக்கொள்ளலாம்.

1. தேவன் அவனவனுடைய திறமைக்கு தக்கதாக தாலந்துகளை தருகிறார் எல்லோருக்கும் சமமாய் அல்ல...

2. இந்த உவமை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாம் எவ்வாறு காணப்படவேண்டும் என கூறுகிறது.

3. நாம் உத்தமமும் உண்மையுமாய் காணப்படும் போது மட்டுமே அனேகத்தின்மேல் அதிகாரி ஆகும் தகுதி அடைகிறோம், பரிபூரணம் அடைகிறோம்.

4. ஒரு தாலந்தை வைத்திருந்தவனிடத்தில் உத்தமம் காணப்பட்டது; ஏனென்றால் அவன் அந்த ஒரு தாலந்தை வைத்திருந்து எஜமானனிடம் திரும்பி கொடுத்தான்; ஆயினும் அவனிடத்தில் கொஞ்சத்தில் உண்மை இல்லாத காரியத்தால் புறம்பான இருளிலே தள்ளப்படுகிறான். அதாவது தேவனுடைய ஊழியக்காரனிடம் எதிர்பார்ப்பது கிறிஸ்துவுக்காக வாழ்ந்து காட்ட கொடுக்கப்பட்ட நேரம், காலம், வாய்ப்பு, ஜெபம், அன்பு காணிக்கைகள் ஆகிய கொஞ்சத்தில் உண்மையாய் இருக்கும் போது மட்டுமே புதிய வானத்திலும் புதிய பூமியிலும் வெளி 21:1 பெரிய பொறுப்புகள் கொடுக்கப்படும்.

5. உள்ளவன் எவனுக்கும் கொடுக்கப்படும் இல்லாதவன் இடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் லூக்கா 19:26. இதில் இல்லாதது என்று கூறப்படுவது கொஞ்சத்தில் உண்மை இல்லாத தன்மையே. ஏனென்றால்; கொஞ்சத்தில் உண்மை உள்ளவன் அனைத்திலும் உண்மை உள்ளவனாக இருக்கிறான். லூக்கா 16:10. நாம் அன்றாட வாழ்க்கையில் அனேக கொஞ்சத்தில் உண்மை இல்லாத காரியங்களை காண்கிறோம்.

- தனக்கு கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்ற கையூட்டு லஞ்சம் வாங்கும் அதிகாரிகள்,
- சரியான நேரத்தில் தரப்படாத சம்பளம்,
- அலுவலக நேரத்தில் தன்னுடைய சொந்த வேலையை செய்தல்,
- குடும்பத்திற்கான நேரத்தில் பொழுதுபோக்காக டிவி-மொபைல் இன்டர்நெட்டில் செலவழிக்கும் பெற்றோர்,
- இயற்கை வளங்களை சுயலாபத்திற்காக வீணாகும் அரசு இயந்திரம்
- உணவு பொருள்களில் வேதிய பொருள் கலப்படம் என இன்னும் எத்தனை எத்தனையோ உள்ளன

இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்தும்படி மத்தேயு 22: 21-இல் ஜாக்கிரதை உள்ளவர்களாக நடப்போம். இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் தேவன் நம்மை நோக்கி “நல்லது உத்தமமும் உண்மையுள்ள ஊழியக்காரன் கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் உன்னை அனேகத்தின்மேல் அதிகாரியாக வைப்பேன் உன் எஜமானுடைய சந்தோஷத்தில் பரதேசி என்று கூறும்படி வாழ்வோம்.

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?
ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ, ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்
சிறிதானதோ பெரிதானதோ, பெற்ற பணி செய்து முடித்தோர்...


பரிபூரண பரிசுத்தமுள்ள சர்வ வல்ல தேவனே...

எங்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ நேரங்களில் உண்மை இல்லாத தன்மை காணப்படுகிறதப்பா. அனுதினமும் நாங்கள் அவற்றை நீக்கிப்போட்டு, இன்னும் உமக்கு அருகில் வரத்தக்கதாக உம்முடைய அளவற்ற இரக்கத்தையும் கிருபையையும் தாரும். நீர் எங்களுக்கு கொடுத்த தாலந்துகளாகிய நேரம், சூழ்நிலை, பணி, பிறருடன் பழகும் உறவு, நிலைகளை ஜாக்கிரதையாய் உண்மையாய் பயன்படுத்தி; கொடுக்கப்பட்ட கொஞ்ச தாலந்துகளை இரட்டிப்பாக்கி உத்தமனான ஊழியக்காரனாக ஊழியக்காரியாக உம்முடைய ராஜ்யத்தில் அழகாய் நிற்க பெலன் தாரும்.

ஆமென்.

*Article by M.C. Christopher*

FELLOWSHIP




# YOU ARE CHOSEN!

It says in 1 Peter 2: 9; "You are chosen by God himself". People may leave you out. People may overlook you but one who matters chooses best. That doesn't mean you were chosen randomly." God looked on you with purpose and said 'I chose him, I chose her. He is my son; she is my daughter. That's who I want in my team.

People may say you are too small, but God says, 'you're in the right size'. People may say you're too weak, you're not talented. But God says 'you're fearfully and wonderfully made' you are talented, your creative, you are anointed, and you are smart.

Whenever we feel that sting of rejection, instead of getting down on ourselves and losing our sense of value, our attitude should be, "I may be disappointed. This may hurt. But I'm not going to sink down into self-pity and start thinking that there is something wrong with me. I know the One who matters most, the one who controls the universe, handpicked me. I may not have been chosen by the coach, the boss, or a friend, but I was chosen by the Most High God; and He says that His plans for me are for good and not evil, to give me a future and a hope."


I know some of you have gone through more than your share of unfair situations. But here's what I've learned. Even though life is not fair, God is fair. If you will not go around thinking there is something wrong with you, but instead start seeing yourself as handpicked by God valuable, lovable, with something great to offer then God said He will pay you back double for your former shame.

That means He'll make the rest of your life twice as good as it would have been if that had never even happened to you.

But you've got to dig your heels in. Don't allow what somebody did or didn't do steal your destiny and cause you to go through life feeling not good enough, not talented, not attractive. No, realize that you're a child of the Highest God. Your value doesn't come from people or accomplishments; it comes from your Creator. Put your shoulders back. Hold your head up high. Live with confidence. God said He will take what was meant for your harm and use it for your advantage. If you will keep this attitude of faith, God will always give you the last laugh. He'll get you where you're supposed to be.

Friends, people may reject you, but God accepts you. He's already chosen you, and He's the One that matters most. He has a way of working everything out for our good! And it's always better than we could have ever imagined!

ARTICLE BY: MRS. SHALINI KINGSLY



# ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கை வரலாறு
# அல்லது கிறிஸ்தவனின் வளர்ச்சி

மத்தேயு 1:1 **ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு:**

**1. ஆபிரகாம்:**

ஆபிரகாமை அழைத்து ஆசீர்வதித்தார் எபிரேயர் 11:8'ல் ஆபிரகாம் தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போன போது; தேவனுடைய வார்த்தையை முற்றிலும் நம்பி, அவரை முற்றிலும் சார்ந்து வேறு எதையும் நோக்காமல், முற்றிலும் கீழ்ப்படிந்த விசுவாசம் ஆகும்.

ஆதியாகமம் 12:4'ல் கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடியே அவன் புறப்பட்டுப் போனான். ஆதியாகமம் 26:4'ல் ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து என்-விதிகளையும் என்-கற்பனைகளையும் என்-நியமங்களையும் என்-பிரமாணங்களையும் கைக்கொண்ட படியால்...; என்று வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. நாமும் அவரின் வார்த்தையின்படியே அவரின் கற்பனையை கைக்கொண்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். அவரின் கற்பனை என்ன...? மத்தேயு 22: 37-40வரை படித்துப் பாருங்கள்.

**2. தாவீது**

நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் என்று சங்கீதம் 23:6'ல் சொல்லுகிறார். ஆம் நன்மையும் கிருபையும் எப்போது நம்மை பின்தொடரும்...? சங்கீதம் 16:8-11வரை படித்து பாருங்கள் கர்த்தரை எப்பொழுதும் நமக்கு முன்பாக வைக்க வேண்டும். கர்த்தருடைய பிரசன்னத்தில் வாழ்கிறவன் கர்த்தர் என்னோடு இருக்கிறார் என்ற உணர்வு உள்ளவனாக வாழ்கிறான். எந்த தொல்லை வந்தாலும் கலங்க மாட்டான். எப்பொழுதும் கர்த்தரின் பிரசன்னத்தில் வாழும் பழக்கம் நம் ஒவ்வொருவருக்கும் தேவை. இதற்காக நம்மை ஒப்புக்கொடுத்து அடிக்கடி ஜெபிப்போமாக. அவருடைய பிரசன்னத்தில் இருப்பவன் மிகுந்த மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் இருப்பான்.

கர்த்தரின் வசனத்தை எப்படி அனுபவிக்க முடியும்...? சங்கீதம் 133:1’ல் விசுவாசிகள் கூடி ஜெபிக்கும்போது, வேததியானத்தின் போதும், துதித்து ஜெபிக்கும்போதும், ஊழியம் செய்யும் போதும் கர்த்தரின் பிரசன்னத்தை அனுபவிக்க முடியும். சங்கீதம் 119:164’ஐ படிக்கும் போது, இப்படியா ஒரு ராஜா…!! என்று வியக்க வைக்கிறது. பாருங்கள், ராஜாவான தாவீது சொல்லுகிறான்; “ஒருநாளில் ஏழுதரம் உம்மை துதிக்கிறேன்” என்று… ஆனால் நம்மால் அப்படி சொல்ல முடியுமா...? சிறிது யோசித்துப் பாருங்கள். நாம் அவரை துதிப்பதே அவர் விரும்புகிறார். நாம் எப்போதும் நமது தேவைகளை குறித்தும், பிரச்சனைகளை குறித்து பேசுகிறோம் அவரை துதித்துப்பாருங்கள்; உங்கள் சூழ்நிலைகள் மாறும். ஆடுகளின் பின்னால் சென்றவரின் பின்னால் இப்போது ஒரு கூட்டம் மக்கள் செல்கின்றனர்.

### 3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

மத்தேயு 10:1’ல் சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். சீஷர்கள் யார்? மார்கு 8:34-35’ல் தன்னைத்தான் வெறுத்து, தனது வசதிகள், ஆதாயங்கள், குடும்பம் ஆகியவற்றை விட தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். முதலாவது தேவன், அடுத்தது குடும்பம், அதற்கடுத்தது ஊழியம் என்பதே சரியான வரிசை. கர்த்தருக்கு நற்செய்தி பணியாற்ற தன் வாழ்க்கையை செலவிடுகிறவன் என்றென்றும் ஈடில்லா வாழ்க்கையை பெற்றுக் கொள்வான். லூக்கா 14:27’ல் எந்நேரமும் மரணமடைவதற்கும், பாடுபடுவதற்கும் ஆயத்தம் இல்லாதவன் இயேசுவுக்கு சீடனாக இருக்க முடியாது..

**நீ வரலாறு படைக்கணுமா...???** ஆபிரகாமை அழைத்து ஆசீர்வதித்த தேவன் உன்னையும் ஆசீர்வதிக்க வல்லவர். ஏனென்றால் அவர் வாக்கு மாறாதவர்…!!!

**நன்மை உன்னை பின் தொடர வேண்டுமா**…??? தாவீதை போன்று அவரை எப்பொழுதும் துதித்துக்கொண்டே இருங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன்னை தேடி வந்தவர்களுக்கு நன்மை செய்ததை போன்று; நீங்களும் உங்களை தேடி வருபவர்களுக்கு நன்மை செய்யுங்கள். மார்கு 16:17-18’ல் குறிப்பிட்டுள்ள விசுவாசமும், அதினால் உண்டாகும் நற்கிரியைகளும் உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் அனைவரிலும் காணப்படும்படி ஊக்கமாக ஜெபிப்போமாக…. ஆமென்

- **திரு.ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்**

YOUTH FELLOWSHIP




**"கீலேயாத்தின் பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னே ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?**
**(எரேமியா 8:22)**

எரேமியா 8 ஆம் அதிகாரத்தை முழுமையாக நாம் வாசித்து பார்க்கும் போது தேவன் விழி வலகி போன தம்முடைய ஜனங்கள் மேல் கொண்ட கரிசனையையும், அவர்கட்கு விடுதலை கொடுக்கும் வண்ணமான அவரின் பாரத்தையும் காணலாம். நம்மில் அனேகர் நமது ஜெபத்தில் மிகவும் அதிகமாக உபயோகிக்கின்ற ஒரு பதம் அல்லது பொருளின் பெயர் "கீலேயாத்தின் பிசின் தைலம்." அதை எரேமியா 8:22ல் இருந்து தான் நாம் கற்றுக் கொணடோம் என நம்புகிறேன். "பிசின் தைலம்" என்பது எல்லோராலும் அடைய முடியாத மிகவும் விலை உயர்ந்த பொருளாக அந்நாட்களில் காணப்பட்டது. தேவனுடைய கரத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் விடுதலையும் ஆசீர்வாதங்களும் அவ்வண்ணமானவை தான். அப்பேர்பட்ட விலை மதிக்க முடியாத ஆசீர்வாதங்களை கீழ் காணும் பிசின் தைலங்கள் வழியாய் பெற்றுக் கெள்ள வேதம் நமக்குக் கற்பிக்கிறது.

**தேவனுடைய வார்த்தை:** "அவர் தம்முடைய **வசனத்ததை** அனுப்பி அவர்களை குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்." சங் 107:20

**தேவனுடைய தழும்புகள்:** **"**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது, அவருடைய **தழும்புகளால்** குணமாகிறோம்." ஏசாயா 53:5

**தேவனுடைய இரத்தம்: "**அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் **இரத்தம்** சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்." 1 யோவான் 1:7

**தேவனுடைய ஆவி: "**கர்த்தராகிய தேவனுடைய **ஆவியானவர்** என் மேல் இருக்கிறார்**,** சிறுமைப் பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையைக் கொடுக்கவும் அவர் எனனை அனுப்பினார்". (ஏசாயா 61:1-3)


**தேவனுடைய அன்பு**: இவையெல்லாவற்றிலேயும் "நாம் நம்மில் **அன்பு** கூருகிற வராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களா யிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானா லும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்மடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று" நிச்சயத்திருக்கிறேன்.(ரோமர் 8:37-39)


**தேவனுடைய பரிசுத்தம்:** யாவரோடும் சமாதானமாயிருக்கவும், **பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கவும்** நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப் பதில்லையே. எபிரேயர் 12:14

ஆம் அன்பானவர்களே! வேதத்தில் இன்னும் அனேக வசனங்கள் இவ் வண்ணமான பிசின் தைலங்களாக நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நம் வாழ்கையில் நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம், வேதத்தை அனுதினமும் வாசிப்போம், தியானிப்போம் அவரது வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்வோம் தேவ சமூகத்திலிருந்து விடுதலையைப் பெற்றுக் கொள்வோம்.

*M. Nesamony.*

# PRIMARY - B









Roselin Balaji

# JESUS was a child like me!

**Dear Parents... Please spent some time to teach your kids...**



Although He was the Son of God,
Jesus was a child like me.
He was respectful to his parents
and kind to others.



Jesus was a child like me.
Joseph and his mother Mary took
good care of him and just like every
child, he loved riding on their donkey.



They lived in the village of Nazareth
and would often have family and
friends come to visit. Sharing happy
times with them was important.



Jesus was the oldest child
in the family. He had two
brothers and some sisters
and he loved them all.



Joseph was a carpenter and
when Jesus was a boy he learnt
to make things from wood too.
Jesus liked to help his friends.



Jesus went fishing with
his friends. He loved to tell
everyone how much their
heavenly Father loved them.



When he was old enough,
Jesus went to school. Joseph
and his mother Mary were proud
to hear Him reading the Scriptures.



When I am alone I think about Jesus.
I want to be more like Him - having
fun with family and friends; respecting
my parents and being helpful and kind.

# BIBLE VERSE

Use the words in the word bank to complete the Bible verse.
(Hint: Romans 8:2 NIV)

Because through ________

________ the ________ of

the ________ who gives

________ has set you

________ from the law of

________ and ________.

| | | |
|---|---|---|
| Christ | death | free |
| Jesus | life | law |
| Spirit | sin | |

# COLOR THIS



COLOUR & SEND IT BEFORE 20TH SEP 20

KINDER / BEGINNER

# PRIMARY

**BIBLE POINT:** The Holy Spirit Guides Us
**BIBLE PASSAGE:** Acts 13-14
**BIBLE VERSE:** John 16:13

Read Acts 13-14 and complete the below narration of the Bible passage by filling in the blanks.

**1 ACTS 13:1**
The prophets and teachers from the Church in ____________ were praying to God.

**2 ACTS 13:2**
The Holy Spirit spoke to them. ____________ and ____________ were to be set apart to do God's work.

**3 ACTS 13:3**
After they had ____________ and prayed, they placed their hands on Paul and Barnabas and sent them off.

**4 ACTS 13-14**
They were guided by the ____________ to different places. They told the people there about ____________

**5 ACTS 14:26**
They did all the work they were called to do and then sailed back to __________.

## SPIRAL PUZZLE

Write the letters on the lines below as you come to them in the spiral.

Just as the _ _ _ _  _ _ _ _ _ _ guided Paul and Barnabas, the _ _ _ _ _ _ _ _ _ _ guides us, too.



JUNIOR & ABOVE

# On the noticeboard

**Mount Gilboa Police Station Case Sheet**

The Mount Gilboa Police Department earnestly seeks your help to know more details about the war happenings and the persons involved in it to close the case. Please fill the details in the below case sheet:




Read 1st Samuel: 11, 28 & 31 and Help to close the Case…

# You did it! Congratulations

## Kidz Coloring

Kariss Angelo
Jania Preni
Johan Sanjo
Reagan Shan
Crasslin Devona
Hazel Hartlyn
Jemima Ashni

## Symbolically Speaking

Jason Eric
Johan Sanjo
Jemima Ashni
Jeremiah Alan
Roshan

Stay Safe and Healthy

## Fill In & Who Am i..?

Johan Sanjo
Jason Eric
Jemima Ashni
Jeremiah Alan
Roshan

## Bible Quiz

Roshan
Annlin & Angelin
Joshua & Joshika

# மத்தேயு

# Matthews 11 - 20




# Bible Quiz

1. இயேசு யோவானைக் குறித்து ஜனங்களுக்கு சொன்னது என்ன?

2. பூமியின் எல்லைகளிருந்து சாலமோனுடைய ஞானத்தைக்கேட்க வந்த பெண் யார்?

3. பரலோக ராஜ்யம் நல்ல -----------------------தேடுகிற --------------------------------------ஒப்பாயிருக்கிறது.

4. ஏரோது யாருடைய நிமித்தமாக யோவானைப் பிடித்து காவலில் வைத்திருந்தான் ?

5. பின்பு, இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு ------------------------------------------------------. பட்டணங்களின் திசைகளுக்கு போனார்.

6. இயேசு, மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று எந்த இடத்தில் கேட்டார் ?

7. மோசேயும், எலியாவும், இயேசுவுடன் பேசுவதை யார்? யார்? பார்த்தார்கள்?

8. மனுஷகுமாரன் எதை இரட்சிக்க வந்தார் ?

9. இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி யார் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிது என்றார் ?

10. இயேசு 12 சீஷர்களை எங்கே தனியே அழைத்தார் ?

## Aug'2020

விடை எழுதியவர்கள்

திருமதி. நான்சி பாஸ்கர்
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திரு.ஜெயபிரதீப் கிரிஸ்டோபர்
திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட்
திரு. M.C கிறிஸ்டோபர்
திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. எபென் A. பிரசாத்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மேக்டலின்
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ஷாலினி கிங்சிலி

## ZOOM WOMEN'S FELLOWSHIP MEETING




நீரே என் தேவன் உம்முடைய நல்ல ஆவி என்னை செம்மையான வழியிலே நடத்துவாராக...

சங்கீதம் 143:10




ஜோசப் ஸ்கிரீவன்வின் 1819'ல் அயர்லாந்தில் சீப்பாட்ரிக் என்னும் இடத்தில் பிறந்தார். தான் பிறந்த ஊரிலே இளமை கல்வியை முடித்தார். பின்னர் டப்ளின் நகரில் திரித்துவ கல்லூரியில் பட்டம் பெற்றார். உடனே அவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மண நாளுக்கு முன்தினம் மணப்பெண் குதிரையில் ஏறி ஒரு ஆற்றை கடக்க முயன்றபோது தவறி விழுந்து ஆற்று நீரில் மூழ்கி உயிரிழந்தார். இதை ஆற்றின் மறுகரையில் நின்று பார்த்தும் காப்பாற்ற முடியாமல் திகைத்து நின்ற ஸ்கிரீவன் மிகவும் வேதனைப்பட்டார். அவரது மன நிலையும் பாதிக்கப்பட்டது.

இந்த துயரத்தை மறக்க 1845-ம் ஆண்டு தனது 25-ஆம் வயதில் கனடாவுக்கு சென்றார். அங்கு நம்பிக்கை துறைமுகம் என்ற ஊரில் ஆசிரியராக பணியாற்றினார். மன நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் தெய்வ பக்தி நிறைந்தவராகவும், பிறருக்காக வாழ்பவராகவும் விளங்கினார்.

தன்னிடம் இருந்த பணத்தை ஏழைகளுக்கும், அனாதைகளுக்கு செலவு செய்தார். ஸ்கிரீவன் ப்ளைமவுத் சகோதரர் என்ற சீர்திருத்த சபையில் சேர்ந்தார். அச்சமயம் ஒரு பெண்ணை மணக்க விரும்பினார். மண நாளுக்கு குறிக்கப்பட்டது. திருமணத்துக்கு முன்பு அந்த சபையில் சேரவிரும்பிய மண பெண்ணுக்கு ஒரு ஏரியில் ஞானஸ்நானம் கொடுத்தனர். தண்ணீர் மிகவும் குளிர்ந்திருந்ததால் ஜலதோஷம் பிடித்தது.

பின்னர் அதிக காய்ச்சல் வந்து அவள் மரித்து போனாள். இந்தத் திருமணத்தின் மூலமாவது தன் மகன் சந்தோஷ வாழ்வு பெறுவான் என்று நம்பிய ஸ்கிரீவன்னின் தாய் தாங்க முடியாத துயரத்திற்குள்ளானார். தன் தாயாரை சமாதான படுத்த 1885-ல் ஒரு பாடலை எழுதினார். அந்த பாடல் தான்,

பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண நண்பர்தான் உண்டே!
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்டர் பாதம் தஞ்சமே

சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்துசோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்,

கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்

நீக்குவாரே நெஞ்சின் நோவை
பலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச் சோர்பை
தீய குணம் மாற்றுவார்.

பலவீனமானபோதும்
கிருபாசனம் உண்டே
பந்து ஜனம் சாகும்போது
புகலிடம் இதுவே

ஒப்பில்லாத பிராண நேசா!
உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.!!.

இந்த பாடலுக்கு ஸ்கிரீவன் கொடுத்த தலைப்பு, "இடைவிடாமல் ஜெபம் பண்ணுவோம்" இந்த பாடலை பார்த்த அவரது நண்பர் இந்த பாடலை இயற்றியது யார் என்று கேட்டார். அதற்கு ஸ்கிரீவன் ஆண்டவரும் நானும் சேர்ந்தே இயேற்றினோம்." என்று தாழ்மையுடன் பதிலளித்தார்.

உலகிலுள்ள 4,00,000 கிறிஸ்தவ பாடல்களில் மிகவும் விரும்பி பாடப்படும் பாடல் என புகழ் பெற்றது. தன் வாழ்வின் கடைசி நாட்களை சுகவீனம், வறுமை மற்றும் மன வியாகுலத்துடன் களித்தனர். இறுதியில் 1886-ம் ஆண்டு தமது 66-வது வயதில் நைஸ்லேக் என்னும் ஊரில் ஒரு சிற்றாற்றில் தவறி விழுந்து மூழ்கி மரித்துப் போனார்.!!!.

மனநோயாளி நிமித்தம் கர்த்தர் உலகமெங்கும் உள்ள மக்களுக்கு ஆறுதல் தரும் பாடலை அளித்தார் என்றால்? தாலந்து படைத்த உங்களையும் கர்த்தர் இன்னும் மேன்மையாக எடுத்து பயன்படுத்த மாட்டாரா?.!!. கர்த்தருடைய கரத்தில் நம்மை அர்பணிப்போம், பெரிய காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் செய்வாராக".!!.

# SING PRAISES TO THE LORD DESPITE YOUR CIRCUMSTANCES

# September Birthdays

01 Mstr. Allen Riyo S/o Mr. Robert Wilson
02 Mrs. Shafeena W/o Mr. Joel Renjith Kumar
04 Mrs. Jamuna Rani W/o Mr. Anthony Jesu Rajan
04 Mr. Celin Jose
08 Ms. Divya Dharshini D/o Mr. D. Rajavel
09 Ms. Abighail D/o P. Davidraj
09 Mr. Vinith J.Samuel
10 Mrs. R. Muneeswari W/o Mr. Ravichandran
10 Mrs. Shiby Angel W/o Mr. Sunith Samuel
10 Mr. Asphin Raj . P
11 Baby. Jemima Ashni D/o Mr. Suresh Rajan
12 Mrs. Pamela Jeniffer W/o Mr. Vijin Raj
17 Mr. Nelson Sopitha Raj
20 Ms. Jamie Shino Mathew D/o Dr. Shino Mathew
21 Mr. S. Jesvin Bose S/o Mr. Selvakumar
23 Ms. Sharon S. Rao D/o Mr. Danesh Yogendra Rao
24 Mr. Danesh Yogendra Rao
27 Ms. Pragathi D/o Mr. Ravichandran
28 Ms. S. Divya Sherrin W/o Mr. Dienshan
29 Mrs. Sugitha Isravel W/o Mr. Praveen Paul








# September

**3** MR. CHANDRASEKAR &
MRS. P. HARIKA

**5** MR. PRAVEEN PAUL &
MRS. SUGITHA ISRAVEL

**7** MR. SURESH RAJAN &
MRS. ANITHA S RAJAN

**8** MR. ANTONY HELVIN GERALD
& MRS. ESTHER

**9** MR. DANESH RAO &
MRS. ANNIE SELVI

**11** MR. VINITH J.SAMUEL
MRS. M. AISHWARIYA

**15** MR. PRINCE EMMANUVEL
MRS. JOSEPHINE NIMSHI

**16** MR. D. RAJAVEL &
MRS. JEIN ARUPUTHAKANI

## Happy Anniversary!

# தினசரி வேத வாசிப்புப் பகுதிகள் - செப்டம்பர் 2020

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும். சங்கீதம் 119:18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 1 சாமுவேல் 25 | 1கொரிந். 6 | எசேக். 4 | சங்கீதம் 40,41 |
| 2 | 1 சாமுவேல் 26 | 1கொரிந். 7 | எசேக். 5 | சங்கீதம் 42,43 |
| 3 | 1 சாமுவேல் 27 | 1கொரிந். 8 | எசேக். 6 | சங்கீதம் 44 |
| 4 | 1 சாமுவேல் 28 | 1கொரிந். 9 | எசேக். 7 | சங்கீதம் 45 |
| 5 | 1 சாமு. 29,30 | 1கொரிந். 10 | எசேக். 8 | சங்கீதம் 46,47 |
| 6 | 1 சாமுவேல் 31 | 1கொரிந். 11 | எசேக். 9 | சங்கீதம் 48 |
| 7 | 2 சாமுவேல் 1 | 1கொரிந். 12 | எசேக். 10 | சங்கீதம் 49 |
| 8 | 2 சாமுவேல் 2 | 1கொரிந். 13 | எசேக். 11 | சங்கீதம் 50 |
| 9 | 2 சாமுவேல் 3 | 1கொரிந். 14 | எசேக். 12 | சங்கீதம் 51 |
| 10 | 2 சாமுவேல் 4,5 | 1கொரிந். 15 | எசேக். 13 | சங்கீதம் 52-54 |
| 11 | 2 சாமுவேல் 6 | 1கொரிந். 16 | எசேக். 14 | சங்கீதம் 55 |
| 12 | 2 சாமுவேல் 7 | 2கொரிந். 1 | எசேக். 15 | சங்கீதம் 56,57 |
| 13 | 2 சாமு. 8,9 | 2கொரிந். 2 | எசேக். 16 | சங்கீதம் 58,59 |
| 14 | 2 சாமுவேல் 10 | 2கொரிந். 3 | எசேக். 17 | சங்கீதம் 60,61 |
| 15 | 2 சாமுவேல் 11 | 2கொரிந். 4 | எசேக். 18 | சங்கீதம் 62,63 |
| 16 | 2 சாமுவேல் 12 | 2கொரிந். 5 | எசேக். 19 | சங்கீதம் 64,65 |
| 17 | 2 சாமுவேல் 13 | 2கொரிந். 6 | எசேக். 20 | சங்கீதம் 66,67 |
| 18 | 2 சாமுவேல் 14 | 2கொரிந். 7 | எசேக். 21 | சங்கீதம் 68 |
| 19 | 2 சாமுவேல் 15 | 2கொரிந். 8 | எசேக். 22 | சங்கீதம் 69 |
| 20 | 2 சாமுவேல் 16 | 2கொரிந். 9 | எசேக். 23 | சங்கீதம் 70,71 |
| 21 | 2 சாமுவேல் 17 | 2கொரிந். 10 | எசேக். 24 | சங்கீதம் 72 |
| 22 | 2 சாமுவேல் 18 | 2கொரிந். 11 | எசேக். 25 | சங்கீதம் 73 |
| 23 | 2 சாமுவேல் 19 | 2கொரிந். 12 | எசேக். 26 | சங்கீதம் 74 |
| 24 | 2 சாமுவேல் 20 | 2கொரிந். 13 | எசேக். 27 | சங்கீதம் 75,76 |
| 25 | 2 சாமுவேல் 21 | கலாத். 1 | எசேக். 28 | சங்கீதம் 77 |
| 26 | 2 சாமுவேல் 22 | கலாத். 2 | எசேக். 29 | சங். 78:1-37 |
| 27 | 2 சாமுவேல் 23 | கலாத். 3 | எசேக். 30 | சங். 78:38-72 |
| 28 | 2 சாமுவேல் 24 | கலாத். 4 | எசேக். 31 | சங்கீதம் 79 |
| 29 | 1இராஜா. 1 | கலாத். 5 | எசேக். 32 | சங்கீதம் 80 |
| 30 | 1இராஜா. 2 | கலாத். 6 | எசேக். 33 | சங்கீதம் 81,82 |
| | | | | |

HELLO September

SEPTEMBER 2020
ALL FRIDAYS
## EVENING SERVICE
6:30 PM TO 7:30 PM
CHURCH MAIN HALL
ALAIN, UAE

FASTING PRAYER
4TH SEP 2020
zoom

10TH SEP 2020
## MEN'S FELLOWSHIP
8:00 PM TO 9:30 PM
zoom

CHILDREN'S
BIBLE SCHOOL
11TH SEP 2020
zoom

17TH SEP 2020
## WOMEN'S FELLOWSHIP
8:00 PM TO 9:30 PM
zoom

24TH SEP 2020
## YOUTH FELLOWSHIP
8:00 PM TO 9:30 PM
zoom

# CSI TAMIL PARISH ALAIN, UAE

PAGE DESIGNED BY: MRS. OLIVIYA SHERIN

# கர்த்தர்

நீதிமான்களின்
வழியை அறிந்திருக்கிறார்;
துன்மார்க்கரின்
வழியோ அழியும்.

சங்கீதம் 1:6

EDITOR
REV. S.P BASKAR B.SC. M.A., B.D / THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES
POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630 | MOB: 052 803 3843
**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR PRIVATE CIRCULATION**